

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஜனவரி 26, 2017 | புரட்சி 16 | முழக்கம் 02 | விலை: ரூ.3.00


## என் சுதந்திரத்தை மறுக்க நீ யார்?

இந்தியாவோடு நம்மை (தமிழ்நாட்டை) இணைத்து சட்டத்தால் கட்டி விட்டதால் நாம் பூரண சுதந்திரம் கேட்கக் கூடாது என்பது தேசக் கட்டளையா என்று கேட்கிறேன்.

நான் (தமிழ்நாடு) பூரண சுதந்திரம் பெறக் கூடாது என்பதற்கு வடநாட்டானா அதிகாரி?

**இது அடிமைநாடா? சுதந்திர நாடா?**

ஒரு நாடு சுதந்திரம் பெற வேண்டுமா? வேண்டாமா? ஒரு மொழி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமா? வேண்டாமா? என்பதற்கு வேறு நாட்டான்களா அதிகாரிகளாய் இருப்பது? இது சொந்த நாட்டானுக்கு எவ்வளவு அவமானம்!

“எனக்கு இந்த காட்டாட்சி வேண்டாம்.”

“எனக்கு இந்தி மொழி வேண்டாம்” என்றால் இதுசட்ட விரோதம் என்று பதிலளித்தால் இது அடிமை நாடா? சுதந்திர நாடா?

**எனது சுதந்திரத்தை மறுக்க அன்னியனுக்கு என்ன அதிகாரம்?**

ஒரு ஊரில் ஒரு பகுத்தறிவுவாதி (அடங்காப் பிடாரி) இருந்தான். அவன் மீது நம்பிக்கைக் காரர்களுக்கு வெறுப்பு. அவனுக்கு ஒரு நாள் ஒரு மயக்கம் வந்து ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு போனார்கள். அங்குள்ள டாக்டரைக் கொண்டு அந்த மயக்கமாய்க் கிடந்தவனை செத்துப் போய்விட்டான் என்று சொல்லிவிடு. நாங்கள் மூட்டைக் கட்டிக் கொண்டு போய்ப் புதைத்து விடுகிறோம் என்று சொல்லி டாக்டரைக் கொண்டு மயக்கமாய்க் கிடக்கிறவனை இவன் செத்துப் போய்விட்டான் என்று சொல்லும்படி செய்து விட்டார்கள்.

உடனே ஆஸ்பத்திரி ஆட்கள் இவனை ஒரு கோணிப் பைக்குள் திணிக்கத் தலையைத் தூக்கி பைக்குள் திணித்தார்கள். அதற்குள் மயக்கக் காரனுக்கு மயக்கம் தெளிந்துவிட்டது. உடனே தன் தலையை தூக்கினவர்களைப் பார்த்து, “என்னை என்னச் செய்யப் போகிறீர்கள்?” என்று கேட்டான். அதற்கு அந்த ஆட்கள், “நீ செத்துப் போய் விட்டாய். உன்னைப் புதைப்பதற்காகத் தூக்குகிறோம்” என்றார்கள். அதற்கு மயக்கம் போட்டுக் கிடந்தவன் இதைக் கேட்டவுடன் தடபுடலாய், “யார் சொன்னான் நான் செத்துப் போய்விட்டேனென்று? நான் உயிரோடு இருக்கிறேன்! என்னை இப்படிச் சொல்கிறீர்களே! இது என்னடா அக்கிரமம்!” என்றான். அதற்கு அந்த ஆட்கள் “நீ செத்து விட்டாய் என்று டாக்டர் சொல்லிவிட்டார். நீ யார் சாகவில்லை என்பதற்கு? நீ என்ன டாக்டரா? ஒரு மனிதன் செத்தானா இல்லையா என்பதற்கு டாக்டருக்குத்தான் உரிமை உண்டு. அ வர் படித்தவர், நீ யார் அதை மறுக்க?” என்று சொல்லி சாக்குப் பையை அவன் தலையில் போட்டார்கள். உடனே அந்த மயக்கக்காரன் தன் மடியிலிருந்த கத்தியை எடுத்து ஆளுக்கு இரண்டு குத்துக் குத்தினான். ஆட்கள் ஓடி விட்டார்கள். அவன் வீட்டிற்கு சுகமே திரும்பி வந்தான் என்கிற ஒரு கதை உண்டு.

அதுபோல் “எனக்கு சுதந்திரம் வேண்டுமென்றால் சட்டத்திற்கு விரோதம் எனக்கு இந்தி வேண்டாமென்றால் அது சட்டத்திற்கு விரோதம்” என்பதாக சட்டத்தைக் காட்டிக் கொண்டே எத்தனை நாளைக்கு ப் பிற நாடுகளை அடிமையாக்கிக் கொண்டு பிற மொழிகளைப் புகுத்திக் கொண்டு ஆதிக்கம் செய்யலாம் என்று வடவர்களும் அவர்கள் கூலிகளும் காத்திருக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. மொழிப் பிரச்சினை நமக்கு நல்ல வாய்ப்பு என்றுதான் கருதுகிறேன்.

இதிலிருந்துதான் பூரண சுயேச்சை தோன்ற வாய்ப்பு ஏற்படும்.

எப்படிப்பட்ட சட்டத்திற்கும் அதன் மதிப்பிற்கும் எல்லை உண்டு.

**– பெரியார்**
**1989ஆம் ஆண்டு பிறந்த நாள் ‘விடுதலை’ மலரிலிருந்து**

## எழுந்தது இளைஞர் எழுச்சி!

# தமிழன்டா!




தமிழ்நாடு இதுவரை கண்டிராத எழுச்சி; புரட்சி என்றும் கூறலாம். புரட்சித் திருவிழா என்றும் அழைக்கலாம். ஜல்லிக்கட்டு என்பது ஒரு குறியீடுதான். தொடர்ந்து தமிழர்கள் டெல்லி, அந்நிய ஆட்சிகளால் புறக்கணிக்கப்பட்டுவரும் அநீதிகளுக்கு எதிராக எழுந்த ஆவேசம். கல்வி மறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்காகக் கல்வி உரிமை கோரி 1950ஆம் ஆண்டுகளில் தொடங்கிய சமூக நீதிப் புரட்சியின் தாக்கங்கள். தலைமுறைகளைக் கடந்து நிற்கும் கல்விப் புரட்சி உருவாக்கிய தன்னம்பிக்கை, தன்மான உணர்வு, சமூக வலைதளங்கள் வழியாக இந்த சக்திகளை இணைத்தது. “இந்த அரசியல் கட்சிகள் மீதோ, அரசியல் தலைவர்கள் மீதோ, திரைப்பட பிரபலங்கள் மீதோ எங்களுக்கு நம்பிக்கை இல்லை; விலகிச் செல்லுங்கள்” என்று அறிவித்து, தன்னெழுச்சியாகத் திரண்ட இலட்சக்கணக் கான இளைஞர்கள் 24 மணி நேரமும் மெரினா கடற்கரையை புரட்சிக் களமாக மாற்றினர்.

‘தமிழன்டா’ என்ற ஒற்றை வாசகத்துக்குள்ளே பீறிட்டது இந்த உணர்வு. இந்தக் குறிச் சொல்லுக்குள் ஆண் அடையாளம் பதிந்திருக் கிறது என்பது உண்மைதான் என்றாலும், சரி பகுதியாக திரண்டிருந்த இளம் பெண்களும் சொல்லுக்குள் பொருள் தேடாமல், உணர்வுகளின் குறியீடாகவே புரிந்துகொண்டு அந்த முழக்கத்தில் தங்களையும் இணைத்துக் கொண்டனர். இந்த கருத்துப் புரிதலே ஒன்றுபடுத்தும் வலிமையான இணைப்புச் சங்கலி.

- இரவு பகலும் பெண், ஆண் தோழர்கள் தோழமையோடு கலந்து நின்றனர்.
- திரும்புமிடமெல்லாம் கருப்புடை; எந்த ஒரு பாலியல் சீண்டலோ முறைகேடுகளோ எங்கும் இல்லை.
- தொடர் போராட்டத்தின் வெற்றி அமைதி வழி முறையை தேர்ந்தெடுத்ததிலும், மகிழ்ச்சிகர மான கொண்டாட்ட உணர்வாக அதை மாற்றியதிலும் அடங்கி இருந்தது.
- காவல்துறையின் கெடுபிடிகள் இருந்திருக்கு மானால் இலட்சக்கணக்கான இளைஞர் களின் இந்த ஒன்று கூடல் நிகழ்ந்திருக்கவே முடியாது. காவல் துறையினரும் ‘தமிழன்டா’ என்ற முழக்கத்தில் தங்களை இயல்பாக இணைத்துக் கொண்டனர்.
- இலட்சக்கணக்கான மக்கள் திரண்ட மெரினாவில் ‘டன் டன்களாக’ குவிந்த குப்பைகளை ஒவ்வொரு நாளும் இளைஞர்களே அகற்றிக் கொண்டனர்.
- மக்களுக்கும் வாகனங்களுக்கும் போக்கு வரத்தை ஒழுங்குபடுத்தித் தந்ததும் - இதே மாணவர் இளைஞர்கள்தான்.
- உணவுப் பொருள்கள் தாராளமாகக் குவிந்தன.
- மோடியின் ரூபாய் நோட்டு செல்லாது என்ற அறிவிப்பும், தமிழர் திருநாளை பொது விடுமுறைப் பட்டியலிலிருந்து நீக்கியதும், காவிரி பிரச்சினையில் இழைத்த துரோகமும், விவசாயிகள் நலன்களை புறக்கணிக்கும் கொள்கைகளும் ஒன்றாகச் சேர்ந்து களத்தை - மோடி எதிர்ப்பு களமாக்கிவிட்டன. ‘உலகம் சுற்றும் மோடி; தமிழ்நாட்டுக்கு வாடி’ என்ற பதாகைகளும் முழக்கங்களுமே திரும்பும் இடமெல்லாம் கேட்க முடிந்தது.
- நாடாளுமன்றத்தில் தமிழக மக்கள் வாக்களித்து அனுப்பிய 39 நாடாளுமன்ற உறுப்பினர்களால் திறக்க முடியாத பிரதமர் அலுவலகக் கதவுகளை தமிழகத்தில் திரண்ட இளைஞர்கள் எழுச்சிதான் திறக்க வைத்தது. அந்த எழுச்சிதான் முதல்வர் பன்னீர் செல்வத்தை டெல்லிக்கு விமானம் ஏற வைத்தது. அந்த எழுச்சி தான் ஒரே நாள் இரவில் அவசர சட்டத்தை வடிவமைத்தது. அந்த எழுச்சிதான் ஒரே நாளில் மத்திய அமைச்சகர்களின் ஒப்புதலைப் பெற்றுத் தந்தது. அந்த எழுச்சிதான் சட்டசபையை கூட்டியது. அவசர சட்டத்துக்கு ஏற்பு வழங்க வைத்ததும் அந்த எழுச்சிதான்.

இளைஞர் சக்தி வென்றது; இது தொடரும்; எதிர் காலங்களில் தமிழின உரிமைக்காக பொங்கி எழும்; அந்த நம்பிக்கையை ஊட்டியிருக்கிறது இந்த சக்தி. ஏராளமான இளைஞர்களின் கரங் களில் பெரியார், பிரபாகரன் படங்கள் காட்சி அளித்தன. இவர்கள் பெரியாரைப் பார்க்காத வர்கள்; ஏன், முழுமையாகப் படிக்காதவர்கள் என்றுகூட கூறலாம். ஆனால் பெரியார் ஊட்டிய இன உணர்வை தங்கள் உள்ளத்தில் ஏந்திக் கொண்டிருக்கிறார்கள் !

தொடங்கிவிட்டது இனப் போர் !

**தலையங்கம்**

## இலக்கு நோக்கி முன்னேறுவோம்; வெல்லட்டும் மாணவர் எழுச்சி!

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக தமிழகத்தில் மாணவர்கள், இளைஞர்களின் போராட்ட எழுச்சி உலகம் முழுதும் தமிழகத்தையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. தமிழக முதல்வர் அவசரமாக டெல்லிக்குப் போய் பிரதமரிடம் அவசரச் சட்டம் கொண்டுவர வலியுறுத்தியிருப்பது மாணவர் போராட்டத்துக்கு கிடைத்த முதல் வெற்றி.

வன்முறைகளில் இறங்கிடாது அமைதி வழியில் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்திட வேண்டும் என்ற மாணவர், இளைஞர்களின் அணுகுமுறையைப் பாராட்ட வேண்டும். அந்த அணுகுமுறை தான் போராட்டத்தை வெற்றிப் பாதை நோக்கி அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது.

இரண்டாவதாகப் போராட்டத்தின் இலக்கு என்பது மிகவும் முக்கியமானதாகும். தமிழர்களின் உரிமைகள் பண்பாடுகளை தொடர்ந்து மறுத்து வரும் நடுவண் அரசுகள் மற்றும் உச்சநீதிமன்றம் போன்ற அதிகார அமைப்புகளுக்கு எதிரானதே இந்தப் போராட்டத்தின் முதன்மையான இலக்கு.

காவிரி உரிமை மறுப்பு, நுழைவுத் தேர்வு திணிப்பு, சமஸ்கிருத திணிப்பு, புதிய கல்வித் திட்டம் என்ற பெயரில் குலக்கல்வி திணிப்பு உள்ளிட்ட பல்வேறு உரிமைப் பறிப்புகளினால் உருவாகி வந்த அழுத்தங்களே ‘ஜல்லிக் கட்டு ஆதரவு’ என்ற போராட்டத்தின் வழியாக வெடித்திருக்கிறது. இந்த உண்மையை தொலைக்காட்சி விவாதங்களில் மாணவ-மாணவிகள் வெளிப்படுத்தி வருகிறார்கள். இது அவர்களின் ஆழமான, தெளிவான புரிதலை வெளிப்படுத்துகிறது. முதன்மையான இந்த எதிர்ப்பு நோக்கத்தை மடை மாற்றி ‘பீட்டாவை தடை செய்’ என்ற முழக்கத்தோடு குறுக்கி விடுவது போராட்டத்தின் நோக்கத்தை திசை திருப்பும் ஆபத்தான முயற்சியாகும். பீட்டாவுக்கு எதிரான குரலும் ஒலிக்கலாம்; ஆனால் அது ஒன்று மட்டுமே நோக்கமாகிடக் கூடாது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற வாழ்வியல் சார்ந்த பகுதிகளில் ஜாதிகள் இல்லாத தமிழர் பண்பாடே நமது பண்பாடு என்பதை சங்க இலக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. பிறகு வடநாட்டு பார்ப்பனியத்தால் நுழைந்த ‘வர்ணப் பாகுபாடு’ அந்த ‘வர்ணங்களின்’ கலப்பினால் உருவான ‘ஜாதி’; தொடர்ந்து அந்த ஜாதியையும் அதன் கட்டமைப்பையும் நிலைநிறுத்த வந்த பார்ப்பன நிறுவனங்கள் அனைத்துமே தமிழர் பண்பாடு அல்ல. மாறாக தமிழின பண்பாட்டைச் சீர்குலைத்த சமூகக் கொடுமை என்ற புரிதலுடன் இந்தப் பண்பாட்டு உரிமைப் போராட்டத்தை நமது மாணவர்களும் இளைஞர்களும் முன்னெடுத்தால் அது மகத்தான சமூகப் புரட்சிக்கு இழுத்துச் செல்லும் என்பது உறுதி. இதுவே நமக்ககான பண்பாட்டு மீட்பும் ஆகும்.

‘ஜல்லிக்கட்டு’ தமிழர்களின் பாரம்பர்ய வீர விளையாட்டு என்று அடையாளப்படுத்தப்பட்டாலும், அதன் நடைமுறைகளில் ‘ஜாதியம்’ ஊடுருவி, நமது பண்பாட்டை சீரழித்தக் காரணத்தால்தான் ஜல்லிக்கட்டை எப்படி தமிழர் பண்பாடாக ஏற்க முடியும் என்ற கேள்வியை நாம் இப்போதும் எழுப்பியே வருகிறோம். ஜாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான இந்தக் கேள்வியை போராட்டக் களத்தில் ஜல்லிக் கட்டுக்கு ஆதரவாக நிற்கும் இளைஞர்கள் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஜாதிகளற்ற ஜல்லிக்கட்டே நமது தமிழ் பண்பாட்டின் பெருமைக்குரிய அடையாளமாக இருக்க முடியும்.

தமிழர்களின் ஒரு பகுதியினர் உணவுப் பண்பாட்டுக்கு எதிராக மாட்டிறைச்சிக்கு தடை போட வேண்டும் என்றும், இந்தியா முழுதுமே இந்துக் கலாச்சாரம் மட்டுமே ஒற்றைக் கலாச்சாரம் என்றும் கூறிக் கொண்டு அதிகாரங்கள் வழியாக அதைத் திணிப்பவர்கள் நமது தனித்துவமான பண்பாட்டை சீர்குலைக்க துடிப்பவர்கள் என்ற புரிதலோடு இந்தப் போராட்ட எழுச்சியை ஆதரிப்பதுபோல முகம் காட்டு வோரையும் ஊடுருவ நினைப்போரையும் எச்சரிக்கையுடன் முறியடிக்க வேண்டும்.

சென்னை கடற்கரையில் திரண்ட மாணவர்கள், “நாங்கள் தலித்துகள் அல்ல; மறவர்கள் அல்ல; கவுண்டர்கள் அல்ல; அனைவரும் தமிழர்கள்” என்ற முழக்கமிட்டிருப்பது, மாணவர்களின் தெளிவான பண்பாட்டுப் புரிதலை அடையாளம் காட்டுகிறது. ‘கோக், பெப்சி’ போன்ற பன்னாட்டு குளிர்பானங்களை விற்பனை செய்ய மாட்டோம் என்று சில மாவட்டங்களில் வணிக அமைப்புகள் முடிவெடுத் திருப்பதும் போராட்டத்தின் சரியான திசை வழியைக் காட்டி நிற்கிறது.

இதேபோல் எகிப்து நாட்டில் இணையதளங்கள் வழியாகத் திரண்ட இளைஞர்கள்தான் அங்கே ஒரு புரட்சியை நிகழ்த்தினார்கள். ‘எகிப்து வசந்தம்’ என வரலாற்றில் குறிப்பிடப்படும் அதே புரட்சி ‘தமிழர் வசந்தமாக’ உருப்பெற்று, சமத்துவமான சுயமரியாதையுள்ள தமிழர் உரிமைகளையும் பண்பாட்டையும் மீட்டெடுக்கும் பாதையில் நமது இளைய சமுதாயம் பயணிக்கும்; அதற்கான நம்பிக்கை ஒளி தெரிகிறது. எழுந்து நிற்கும் - இளைய சமுதாயத்தின் போராட்டக் களங்களில் திராவிடர் விடுதலைக் கழகம் துணை சேர்க்கும்; அரண் அமைத்துத் தரும் என்று உறுதி கூறுகிறோம்.

**– கொளத்தூர் மணி**

தலைவர்

திராவிடர் விடுதலைக் கழகம்

## ‘உலகம் சுற்றும் மோடி; மெரினா பக்கம் வாடி!’

மாணவர், இளைஞர்கள் நடத்திய எழுச்சிப் போராட்டம் குறித்து வெளி வந்த சில முகநூல் பதிவுகள்.

ஜல்லிக்கட்டு ஆதரவு, பீட்டா எதிர்ப்பு என்பன இரண்டு நாட்களாக மத்திய அரசு எதிர்ப்பு, நரேந்திர மோடி எதிர்ப்பு என்பதாக உருப்பெற்றுள்ளது. நான் தொடர்ந்து சொல்லிவருவதைப்போல இது ஒரு federal அரசமைப்பு என்பதை மறந்து எதேச்சதி காரத்துடன் செயல்படும் மத்திய அரசுக்கு எதிரான போராட்டமாக இன்று அது வடிவம் பெற்றுள்ளது. பல்வேறு விதமான மோடி எதிர்ப்பு முழக்கங்கள், நகைச்சுவை யாய், கவிதையாய், அரசியல் கூர்மை மிக்க தாய், சற்றே ஆபாசமாய்... வெகுமக்கள் தன்மையின் அனைத்து பலங்களுடனும், பல வீனங்களுடனும் ஆர்ப்பரிக்கும் முழக்கங்கள் தமிழக பா.ஜ.க தலைமையின் எதிர்கால ஆசைகளில் மட்டும் மண் வார்க்கவில்லை.. பா.ஜ.க பக்கம் சாய்ந்து பதவி, பணச் சுகம் காணலாம் எனத் தரகு வேலை பார்த்துவந்த தூதுவர்களின் ஆசைக்கும் ஆப்பு வைத்து விட்டது.

**– அ. மார்க்ஸ்**

### அண்ணா ஒரு நிமிஷம்ணா...

ஆங்காங்கே கூடி நின்ற கும்பல்களில் ஒன்றினில் நான் நிற்க, அங்கே நூற்றுக் கணக்கான இளைஞர்கள் மத்தியில் இரண்டு பெண்கள் கோஷமிட்டு போராடிய வேளையில், திடீரென்று ஒரு பெண் குரலிட்டாள்‘அண்ணா ஒரு நிமிஷம்ணா. என் ஹேண்ட் பேக் (கைப்பை) மிஸ்ஸா கிடுச்சு. கோஷத்தை உடனடியாக நிறுத்திய இளைஞர்கள் சற்றே பதற்றமாக ‘ஏம்மா, நீ கவனிக்கலையா?’ ‘இல்லைங்கண்ணா, ஆபீசுலருந்து நேரா வந்தேன், லஞ்ச் பேக்லதான் இருந்துச்சு. மொபைல வெளிய எடுக்கறதுக்காக எடுத்தேன். திரும்ப உள்ள வச்சேனான்னு தெரியல’. ‘பணம் எதும் வச்சிருந்தி யாம்மா.’ ‘ஆமாணா, முன்னூறு நானூறு ரூபா இருக்கும். உள்ள என்னோட ஐடி கார்டும் இன்னொரு மொபைலும் இருக்குது.’ அப்போ உடனடியா அந்த மொபைலுக்கு ட்ரை பண்ணும்மா’ என்று சொல்லி முடிப்பதற்குள் இருபதடி தூரத்தில் ஒரு சலசலப்பு... ஒரு ஆரஞ்சு நிற கைப்பை உயர்த்திக் காட்டப்பட்டது. அருகில் வரவழைத்து அந்தப்பெண் கையில் கொடுத்து ‘இது தானேம்மா, பணம் சரியா இருக்கா பாத்துக்க’ என்றவரிடம்‘அதல்லாம் இருக்கும்ணா’ என்று பையை பிரித்துப் பார்க்காமல் சிரித்துக் கொண்டே சொன்னார் அந்தப் பெண். ‘ஆபீசுலருந்து நேரா வரேன்னியே, சாப்பிட்டியா’ அடுத்த கேள்வி. ‘ஆச்சுங் கண்ணா, ரொம்ப தேங்க்ஸ்.’ ‘வேண்டும் வேண்டும் ஜல்லிக்கட்டு வேண்டும்!’ தொடர்ந்தது போராட்டம்.

இதில் எதை உயர்வென்பது? பையோடு பணமும் மொபைலும் கிடைக்கப்பெற்றும் , அதை திரும்பக்கொடுத்த இளைஞர்களின் நாணயத்தையா... இல்லை அதைக்கையில் வாங்கியவுடன் சோதித்துப் பார்க்காத அந்தப்பெண்ணின் நன்றி மேலோங்கிய நம்பிக்கையையா... இரண்டுக்குமே தலை வணங்கியே ஆக வேண்டும்.எங்களைப் பொறுக்கிகள் என்று ஏளனமிட்டவருக்கு ஒரு விஷயத்தை தெளிவு படுத்திக் கொள்கிறோம். தனியாய்க் கிடைத்த நிர்பயா மீது பாய்ந்து வெறி தீர்த்த ‘‘உத்தமர்கள்’’ வாழும் இதே திருநாட்டில் பதற்றத்தில் வெளிறிய பெண்களை நிற்க வைத்து பயம்போக்கித் தேற்றும் பாங்குணர்ந்த ‘‘பொறுக்கிகளும்’’ வாழ்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

டி.வி. சேனலின் நெறியாளர் போராட் டத்தில் பேட்டி எடுத்த போது..... ‘MSW படிக்கும் நீங்கள், மெரினாவில் இன்று போராடக் காரணமென்ன? விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவரா?’‘என் குடும்பம் விவசாயக் குடும்பமல்ல. ஆனால் நான் சோறு தான் சாப்பிடுகிறேன்... நீங்க?’ **– ராஜேஷ்குமார்**

மாணவர்களின் பாதுகாப்பு வளையத் தையும் மீறி ஒரு சாமியார் மேடையேற முயன்றார். இளம்காளைகள் தண்ணீர் பாக்கெட் வீசி எறிந்து துரத்தி விட்டனர். இந்த தெளிவு தமிழ் நாட்டை எங்கேயோ கொண்டு செல்ல போகுது !

**– சங்கீதா வெங்கடேஷ்**

### இன்றைய அனுபவத்தில் உணர்ந்தது...

அரசியலற்ற கூட்டத்திலிருந்து அரசியல் அரும்புவதாக இந்த காட்சியைப் பார்ப்பதில் பிழையேதுமுண்டா? இதனை போராட்ட மென்பதை விட ஒரு மாபெரும் ஒன்று கூடல் திருவிழா என்றழைப்பதே பொருத்தம்... மறுப்பதற்கில்லை. ஆனால் , இந்த திருவிழா மதம் சார்ந்து , சாதி சார்ந்து அல்ல... ஒரு அரசியல் நியாயம் சார்ந்து. நம்மால் குஷால் பேபிகள், பாப்கார்ன்கள் என்றழைக்கப்பட்ட கூட்டத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் தான் இந்த ஏற்பாட்டோடு மெரினாவில் நின்றுக் கொண்டிருக்கிறார். BYTE வாங்குவதற்காக நான் பேசிய அத்துனை மாணவர்களும், ஜல்லிக்கட்டு என்பது எங்களுக்கு ஒரு ஆரம்ப புள்ளி தான்... தொடர்ந்து விவசாயிகள் தற் கொலை, காவிரி பிரச்சனை அனைத்துக்கும் நாங்கள் போராடவிருக்கிறோமென சொன் னார்கள். அந்த போராட்டங்களெல்லாம்... ஜல்லிக்கட்டு போராட்டத்தைப் போல மகிழ்ச்சிகரமானதாக இருக்காதென்பது அவர்களுக்குத் தெரியவில்லை தான்.

ஆனால், அந்த உந்துதலை ஆக்கப் பூர்வமான ஒன்றாக பார்ப்பது தவறா ? மாநில அரசே அனுமதித்த இந்தக் களத்தில்.. மாநில அரசு பதற்றமடையுமளவுக்கும் நகர்தல்கள் நடந்துக் கொண்டிருக்கின்றன என்பதை களத்தில் பார்க்க முடிந்தது. முத்தாய்ப்பாக, சென்னை நகரின் வான்வெளியெங்கும் ஒலிக்கும் குரல்கள் சுமக்கும் ஒரே விஷயம்.. ‘மோடி ஒழிக.’ இதனையும் ஆக்கப்பூர்வமாக பார்ப்பது பிழையா? ‘ஊர் சுத்துற மோடி வாடி வாசல் வாடி’... என்றொலிக்கும் கோஷங்களில் ஜல்லிக்கட்டிற்கான கோபம் மட்டும் தான் இருக்கிறது என்று என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. பண மதிப்பு நீக்க நடவடிக்கை, காவிரி, விவசாயிகள் தற்கொலை உள்ளிட்ட கோபங்கள் அதில் புதைந்திருக் கின்றன என்பதை அவர்களோடு உரையா டினால் புரிந்துக் கொள்ள முடியும். வங்கக் கடலுக்கு மூச்சு முட்டுமளவுக்கு மனிதக்கடல் மெரினாவில் சுனாமியாக பாய்ந்து கொண் டிருக்கிறது, அதில் 90சதவீத முழக்கங்கள் மோடிக்கெதிராகவும், பா.ஜ.க.வுக்கெதிராக வும் ஒலிக்கின்றன. இம்மாபெரும் மக்கள் போராட்டத் தினைப் புகைப்படங்களாகப் பதிவு செய்ய வாருங்கள். உலகெங்கிலும் இலட்சக்கணக்கான தமிழர்களால் ஒன்று இணைந்து நடத்தப்படும் இப்போராட்டம் வெறும் போராட்டமாக மட்டுமல்லாமல் மகத்தான ‘கலாச்சாரத் திருவிழா’ வாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒரு முறை மெரினா சென்று பாருங்கள். பறையிசை, சிலம்பாட்டம், தப்பாட்டம் எனத் தமிழர்களின் பாரம்பரியக் கலைகள் அனைத் தும் இளைஞர்களால் மீட்டுரு வாக்கம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாம் தவறவிட்ட, மறந்துபோன கொண்டாட்டங் கள் அனைத்தும் அங்கே மிகச் சிறப்பாக நடந் தேறிக் கொண்டிருக்கின்றன. அனைத்தும் உன்னதமான வரலாற்றுத் தருணங்கள். ஆனால் அவற்றைப் புகைப் படங்கள் எடுப்ப தற்கு ஆட்கள் இல்லை. வாய்ப்பிருக்கும் நண்பர்கள் விரைந்து செயல் படவும்.

**– அருண் டிஐஆர்**

### கடவுள் நம்பிக்கை இல்லையென்றாலும்...

கடவுள் நம்பிக்கை எனக்கில்லை; ஆனாலும் அனைத்து சாதிகளும் அர்ச்சகராக வேண்டுமென்ற ஆசை எனக்குள்ளது. கடவுள் நம்பிக்கை எனக்கில்லை இருந்தாலும் கடவுள் மீது நம்பிக்கை வைத்து கோவிலுக்குள் செல்பவர்களை சாதியை காரணம் காட்டி நுழைய மறுப்பு தெரிவிப்பதை எப்படி அனுமதிக்க முடியும்? ஜல்லிக்கட்டின் மீது எனக்கு விருப்பமில்லை; ஆனால் தமிழர்களின் உரிமையை மதவெறி பிடித்த மோடி தலைமையிலான மத்திய அரசு தடை விதிப்பதும், இங்குள்ள பிஜேபியினர் ஜல்லிக் கட்டை ஆதரிப்பது போல் பாசாங்கு செய் வதும்... மாநில அரசு தடியடி நடத்தி கைது செய்வதையும் எப்படி அனுமதிக்க முடியும்?

இவ்வளவு போராட்டங்களுக்குப்பிறகு ஒருவேளை ஜல்லிக்கட்டு போராட்டம் வெற்றியடையும் பட்சத்தில் அதன் பிறகு நடைபெறும் ஜல்லிக்கட்டில் இதுவரை கடைப்பிடித்து வந்த சாதியும், தீண்டாமையும் தளர்த்தப்படும் என்றே நான் நம்புகின்றேன். “மனிதன் சூழ்நிலையை தீர்மானிப்பதில்லை; சூழ்நிலை தான் மனிதனை தீர்மானிக்கிறது” கார்ல் மார்க்ஸ் மத்திய- மாநில அரசுக் கெதிராக போராட வேண்டிய சூழ்நிலை தற்போது உருவாகியிருக்கிறது... “வாழ்க்கை போராட்ட மயமானது. போராட்டம் இன்ப மயமானது.” ***- காரல் மார்க்ஸ்.***

**– ரமேசு பெரியார்**

# உலக நாடுகளை ஏமாற்ற சிங்களத்தின் புதிய சதித் திட்டங்கள்

*இலங்கைக்கு அய்.நா. மனித உரிமைக்கு தந்த கெடு 2017 மார்ச் மாதத்தோடு நிறைவடைகிறது. மீண்டும் உலக நாடுகளை ஏமாற்றும் முயற்சிகளில் இறங்கியுள்ளது இலங்கை. தமிழர்கள் இந்த சதியை முறியடித்து முன்னெடுக்க வேண்டிய திட்டங்கள் என்ன?*

கடந்த 2015 அக்டோபர் மாதம், இலங்கை அரசு அய். நா. வின் மனித உரிமைகள் குழுவிடமும் இலங்கை மக்களிடமும் ஒரு வாக்குறுதியை அளித்திருந்தது. "கடந்த காலத்தில் நடந்தவை குறித்து சட்ட ரீதியான மற்றும் பிற வகைகளிலும் முழுமையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் உண்மை, நீதி, நிவாரணம் மற்றும் மீண்டும் தவறுகள் நடக்காதிருப்பதை உறுதி செய்வது" என்பதே அந்த வாக்குறுதி.

15 மாதங்கள் கடந்து விட்ட நிலையில், கடந்த ஜனவரி 13, 2017 அன்று, இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் மங்கள சமர வீரா, இலண்டனில் நடந்த ஒரு கலந்துரையாடல் கூட்டத்தின் போது, தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற இலங்கை அரசுக்கு இன்னும் அதிக நேரம் தேவைப்படுகிறது என்று கூறியுள்ளார்.

தனது வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருப்பது இலங்கை அரசுக்கு இது முதல் முறை அல்ல. 1948ஆம் ஆண்டு இலங்கை பிரிட்டனிட மிருந்து விடுதலைப் பெற்ற உடனேயே பவுத்த சிங்கள பெரும்பான்மையினருக்கும் தமிழ்ச் சிறுபான்மையினருக்குமான சிக்கல்கள் தொடங்கி விட்டன. 1956 முதல் தொடர்ந்து வந்த அரசுகள் சிங்கள பேரினவாதக் கோட்பாட்டினுள் நின்றே அரசியல் நடத்தினர். 1948 முதல் 2008 வரையிலான 60 ஆண்டுகளில், இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் பல ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. ஆனால் அவை அனைத்துமே இலங்கை அரசால் ஒரு சார்பாக கைவிடப்பட்டும் உள்ளன. 1958-ஆம் ஆண்டு, பவுத்த பிக்குகள் மற்றும் சிங்கள பேரின வாதிகளின் அழுத்தத்தைத் தாங்க இயலாமல் அன்றைய இலங்கை பிரதமர் பண்டாரநாயகே, தமிழர் தலைவர் செல்வநாயகத்துடன் தான் போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தின் மூலப் பிரதியை அனைவரும் பார்க்க கிழித்து எறிந்த நிகழ்வு சிங்கள அரசுகளின் மனப்போக்கை விளக்கும்.

இந்தப் பின்னணியில், இலங்கையில் நிலவும் சூழலை, மாறிவரும் அரசுகளை கடந்து பார்க்க வேண்டியது முக்கியமாகிறது. கடந்த மே 2009 உடன் இலங்கையில் நடந்த உள் நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததாக இலங்கை அரசு அறிவித்தது. அதற்கு பிறகு தமிழர்களின் நிலையானது அதற்கு முன் இருந்ததை விட பல மடங்கு சீரழிந்து நிற்கிறது.

கடந்த மார்ச் 31, 2011 அன்று அய். நா. வின் பொதுச் செயலாளரின் வல்லுநர் குழு அளித்த அறிக்கையின்படி ஆகஸ்டு 2008 முதல் மே 13 2009 வரையிலான காலக்கட்டத்தில் ஏறத்தாழ 40,000 வரையிலான தமிழ் பொது மக்கள் இறந்து போயுள்ளனர். எஞ்சிய தமிழர்கள், வன்னியிலும் பிற இடங்களிலும் அடைத்து வைக்கப்பட்டும், அவர்களது சொந்த உடைமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் உள்ளனர். தங்களது வாழ்வாதாரங்களை மறு கட்டமைப்பு செய்யவும் தங்கள் நிலங்களில் மீள் குடியேறவுமான அவர்களது உரிமைகளை இலங்கை இராணுவம் அவர்களிடமிருந்து பறித்து விட்டது. உலக நாடுகளிடமிருந்து இலங்கை அரசு பெறும் பணத்தைக் கொண்டு நடத்தப்படும் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவது இலங்கை இராணுவமாக உள்ளது. தமிழர்களின் மரபுவழி தாய் மண்ணில் சிங்களரை குடியேற்றும் நோக்கில் இந்த வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. காலம் காலமாக, வரலாற்று ரீதியாக, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த பகுதிகளின் மக்கள் தொகை விகிதாச்சாரம் திட்டமிட்டு மாற்றி அமைக்கப்படுகிறது. பாதுகாப்புப் படையினரால் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இழைக்கப்படும் பாலியல் கொடுமைகள் குறித்து பல புகார்கள் எழுந்துள்ளன.

மைத்திரிபால சிறிசேனா பதவி ஏற்றப் பிறகு எந்த வகையிலும் தமிழர்களின் நிலையில் மாற்றம் ஏற்படவில்லை.

- பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், சிறைகளுக்குள் சிறையில் தனிமையில் வைக்கப்பட்டுள்ளனர். தமிழர் தாயகத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள சிறைகளில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளதால் அவர்கள் குடும்பத்தினர் அவர்களை சந்திப்பது கடினமாக உள்ளது. வழக்கு விசாரணைகள் உரிய காரணமின்றி தாமதிக்கப்படுகின்றன. இதனால் தங்கள் மீதான வழக்குகளுக்கான தண்டனைக்குரிய காலத்தைக் கடந்தும் விசாரணைக் கைதி களாகவே பலரும் சிறையில் வாடுகின்றனர்.
- காவல் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தின் நான்காவது மாடி சித்ரவதைகளுக்குப் பெயர் பெற்றதாகவே இன்னமும் விளங்குகிறது. அய். நா. மனித உரிமைக் குழுவில் இது தொடர்பில், ஏறத்தாழ 400 தனி நபர் புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன.

## தமிழினம் என்ன செய்யப் போகிறது?

- நல்லிணக்கம் குறித்து பெரிதாக பேசும் சிறிசேனா அரசு இதுவரை தமிழர் தாயகப் பகுதியிலிருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ளவில்லை. 5 குடிமக்களுக்கு ஒரு இராணுவத்தினர் என்ற விகிதத்தில் இருக்கும் அதீத இராணுவ இருப்பானது தமிழ் மக்களின் அன்றாட நடவடிக்கைகளை பெரிதும் பாதிப்பதாகவும் அச்சுறுத்துவதாகவும் உள்ளது. இராணுவத்தினர் கடைகள், பண்ணைகள், உணவகங்கள், சிறார் பள்ளிகள் என பொது மக்கள் நிறுவனங்களை நடத்துவது, மறைமுகமாக அவர்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியாகவே உள்ளது.
- இலங்கை அரசு உருவாக்கியுள்ள உள்நாட்டு விசாரணைக் குழுவிடம் இந்த இராணு வத்தினர் முன் தங்கள் வாக்குமூலங்களை அளிக்க மக்கள் முன் வர மாட்டார்கள்.
- கடந்த அக்டோபர் 20, 2016 அன்று யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்ஷன் மற்றும் நடராஜா கஜன் எனும் இரு மாணவர்கள் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இலங்கை இராணுவத்தினர் செய்யும் அட்டூழியங்களுக்கு எதிராக மக்களை அணிதிரட்டிப் போராடுவதில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களே முன்னணியில் நிற்கின்றனர். எனவே இந்த இரு மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதானது ஒட்டுமொத்த மாணவர்களுக்கு விடப்பட்ட அச்சுறுத்தலாகவே உள்ளது.
- கடந்த பிப்ரவரி 1 2010-இல் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்ட அறிக்கையில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பெயரால் 11,000 பேர் இலங்கை அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது. இலங்கை அரசும் 11,000 பேர் முன்னாள் போராளிகள் அல்லது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கள் என ஒப்புக் கொண்டுள்ளது. இந்த 30 பக்க அறிக்கைக்கு மிகப் பொருத்தமாக "விடுதலைப் புலிகள் என சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களின் நிச்சயமற்ற நிலை" என்று தலைப்பிடப் பட்டுள்ளது. இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் யார் யார், அவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளனர், என்ன நிலையில் உள்ளனர் என்ற விவரங்களை வெளியிட அரசு மறுக்கிறது. இது அவர்களின் குடும்பங்களை கடும் மன அழுத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. புதிய அரசு பொறுப்பேற்றப் பிறகும் இந்த நிலை மாறவில்லை.
- கடந்த ஆகஸ்டு 7, 2016 அன்று வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேசுவரன், "இலங்கை அரசின் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகளுக்கு இரசாயன ஊசி போடப்பட்டதாகவும் அதனால் பல போராளிகள் புற்று நோய் போன்ற கொடிய ஆட்கொல்லி நோய்களுக்கு ஆளாகி இறந்ததாகவும்" தனக்கு புகார் வந்துள்ளதாக கூறியுள்ளார். இது தொடர்பில் மேலதிக விவரங்களை தான் சேகரித்து வருவதாகவும் கூறியுள்ளார். இந்நிலையில் தமிழ் மக்கள் சமூகம் இது தொடர்பில் பன்னாட்டு மருத்துவர்களைக் கொண்டு பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை எழுப்பியுள்ளது.
- நீதிக்காக எழும்பும் குரல்களை ஒடுக்க பயன்படுத்தப்படும் மற்றொரு ஆயுதம் பொய்யாக புனையப்பட்ட வழக்குகளும் அதை தொடர்ந்த கைதுகளும். போர் முடிந்ததாக அறிவிக்கப்பட்டப் பிறகான கடந்த 7 ஆண்டு களில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் நெடுகிலும், ஆண்களும் பெண்களுமாக பலரும் காரணமின்றி கைது செய்யப்பட்டனர். இந்நிலை சிறிசேனாவின் ஆட்சியிலும் தொடர்கிறது
- போரின் ஆகப் பெரிய விளைவுகளில் ஒன்று மக்கள் தங்கள் வாழ்விடங்களிலிருந்தும், தங்கள் வாழ்வாதாரத்திற்கு நம்பியிருந்த நிலங்களி லிருந்தும் இடம் பெயர்ந்ததே. இவ்வாறு இடம் பெயர்ந்தவர்கள், என்றாவது ஒரு நாள் தங்கள் நிலங்களின் மீதான உரிமைகள் தங்களுக்கு மீண்டும் கிடைக்கும் என்று நம்பினார்கள். ஆனால் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பானது பல்லாயிரக்கணக்கான மக்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்தும் வாழ்வாதாரங்களி லிருந்தும் தள்ளியே வைத்துள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் போரின் போதும் அதற்கு பின்னரும் இராணுவம் ஏராளமான நிலங்களை கையகப் படுத்தியது. கடந்த அரசும் தற்போதைய அரசும் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி சட்ட விரோதமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள நிலங்களை பறிப்பதில் ஈடுபட்டனர். இவ்வாறு நில அபகரிப்புத் தொடர்பான சிக்கல்களை வருவாய்த் துறை இது வரையில் கவனிக்க மறுக்கிறது. கடந்த ஆண்டு ஆட்சி மாறியப் பிறகும் கூட இந்நிலையே தொடர்கிறது. ஆக்கிரமித்துள்ள இராணுவத் தினர் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரங்களை அழித்து, உணவு விடுதிகளையும் பண்ணை களையும் இந்நிலங்களில் நடத்தி வருகின்றனர்.
- தனி நபர்களின் நிலங்களை மட்டுமல்ல, மாவீரர் துயிலும் இல்லங்களையும் இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. தமிழ் மக்கள் புனிதமாக கருதும் இந்த துயிலும் இல்லங்களை இடித்து, சிலவற்றை கால்பந்து மைதானமாகக் கூட மாற்றியுள்ளது இலங்கை இராணுவம்.

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# காந்தி படுகொலை நாள் சிந்தனை: பாசிசத்தை தமிழகம் ஏற்காது

*‘விடியல்’ ஜனவரி மாத இதழில் விடுதலை இராசேந்திரன் எழுதிய கட்டுரை.*

ஜனவரி 30, காந்தி, கோட்சேயின் துப்பாக்கிக் குண்டுக்கு பலியான நாள். அந்த நாளை நியாயமாக இந்துத்துவா எதிர்ப்பு நாள் என்று அறிவித்திருந்தால் சரியாக இருக்கும். ஆனால், தீண்டாமை எதிர்ப்புக்கு அரசு ஊழியர்கள் உறுதி ஏற்கும் நாளாக அது குறுக்கப்பட்டது. பார்ப்பனியத்தின் திட்டமிட்ட ஒரு சதி தான்.

இந்திய வரலாற்றில் காந்தியின் ஆளுமை பாத்திரத்தை குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அவருடன் உடன்படுகிற முரண் படுகிற கருத்துகள்; அவரை உறுதியாக ஆதரித்தவர்கள், எதிர்த்தவர்கள் இருவருக் குமே உண்டு. தவறான புரிதல்களில் அவ்வப் போது குழப்பமான கருத்துகளை வெளிப் படுத்தியவர்தான் காந்தி. ஆனால் அதற்கு உள்நோக்கம் அவரிடம் ஏதும் இல்லை என்றுதான் மதிப்பிட வேண்டியிருக்கிறது.

இந்தியாவை இந்துக்களின் இராஷ்டிர மாக்குவதே - சித்பவன் பாப்பனரான திலகர் கேட்ட சுயராஜ்யம். திலகர் காலத்துக்குப் பிறகுதான் காங்கிரஸ் தலைமை காந்தியிடம் வருகிறது. காந்தி தனது சுதந்திரப் போராட் டத்தில் இஸ்லாமியர்களையும் தலித் மக்களையும் (காந்தியார் மொழியில் ‘அரிஜன்) இணைத்துக் கொள்ளவே விரும்பினார்.

காந்தி வலியுறுத்திய ‘கதர்-தீண்டாமை விலக்கு’ கொள்கைகளில் ஈர்க்கப்பட்டதால் தான் பெரியார் காங்கிரசிலேயே சேர்ந்தார். ஆனால் அன்றைக்கு காங்கிரசுக்குள்ளேயே ஆதிக்கச் சாதிகளாகத் திகழ்ந்த பார்ப்பனர்கள் பிடிக்குள் காந்தி சிக்குண்டு கிடந்த நிலையில், பெரியார் காந்தியின் எதிர்ப்பாளரானார். காந்திக்கு இருந்த மக்கள் செல்வாக்கை இந்துத்துவ சக்திகள் தங்கள் பாசிசக் கொள்கைக்குப் பயன்படுத்திக் கொள்ள முயன்ற நிலை உருவானபோது காந்தியின் பெயரால் மக்களிடம் கட்டமைக்கப்பட்ட ‘புகழ் மாயை’யைத் தகர்க்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் பெரியார்.

தமிழ்நாட்டு சுற்றுப் பயணங்களில் காந்தி யாருக்கு நேரடியாகக் கிடைத்த நேரடியான அனுபவங்கள் இந்துத்துவ பார்ப்பனியம் குறித்த புரிதல்களை அவரிடம் உருவாக்கியது என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மை.

1927ஆம் ஆண்டு திருச்சியில் பார்ப்பன நிறுவனமாக விளங்கிய தேசிய கல்லூரியில் காந்தி பேச அழைக்கப்பட்டிருந்தார். கல்லூரி நிர்வாகம் காந்திக்கு வரவேற்பு பத்திரம் ஒன்றை எழுதி வாசித்தது. ஆனால் அது சங்பரிவார்கள் கூறும் ‘தேவபாஷை’யான சமஸ்கிருதத்தில் இருந்தது. சமஸ்கிருதத்தில் பற்று கொண்ட காந்தியார், இதனால் மனம் குளிர்ந்து போவார் என்று கல்லூரி பார்ப்பன நிர்வாகம் நினைத்தது. ஆனால், காந்தியின் கருத்தோ வேறு விதமாக இருந்தது. வரவேற்பு பத்திரத்தை வாசித்து முடித்தவுன் காந்தி, “இந்தக் கூட்டத்தில் சமஸ்கிருதம் தெரிந் தவர்கள் இருந்தால் கையை உயர்த்துங்கள்” என்று கேட்டார். விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே கையை உயர்த்தினார்கள். “பெரும் பாலோருக்கு சமஸ்கிருதம் தெரியாதபோது, அந்த மொழியில் ஏன் வரவேற்பு பத்திரம் வாசிக்க வேண்டும் ?” என்று காந்தி கேட்டார். கல்லூரி நிர்வாகத்தினர் அதிர்ச்சி அடைந்தனர்.

காந்தியுடன் வந்த மகாராஷ்டிரா மாநிலத்தைச் சார்ந்த காகாகலேல்கர் (இவர் சுதந்தித்துக்குப் பிறகு இந்திய அரசு நியமித்த முதல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராக செயலாற்றியவர்). உங்களுக்கு சமஸ்கிருதம் பிடிக்குமே, ஏன் எதிர்த்தீர்கள் ? என்று கேட்டதற்கு காந்தியார் தந்த பதில் மிகவும் முக்கியமானது. “இப்பகுதியில்” பிராமணர், பிராமணரல்லாதார் இயக்கம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த இயக்கத்தின் எதிரொலியாகத்தான் வரவேற்புரையை சமஸ்கிருத்தில் எழுதியிருக்கிறார்களோ என்று நான் அய்யப்படுகிறேன். அதனால் தான் என் வருத்தத்தை வெளிப்படுத்தினேன்” என்றார் காந்தி. (ஆதாரம்: ம.பொ.சி. எழுதிய தமிழகத்தில் பிற மொழியினர் நூல்)

1947ஆம் ஆண்டில் ‘சுதந்திரத்துக்கு’ சில மாதங்களுக்கு முன் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியில் முதலமைச்சராக இருந்தவர் ஓமந்தூர் இராமசாமி (ரெட்டியார்). பார்ப்பன ரல்லாத பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக் கீட்டை முதன்முதலாகக் கொண்டு வந்தவர் இவர்தான். பார்ப்பனர்கள் கொதித்துப் போனார்கள். அப்போது தமிழகம் வந்திருந்த காந்தியை சந்தித்து, “இராமசாமி ரெட்டியார், இராமசாமி நாயக்கராக செயல்படுகிறார். இடஒதுக்கீடு உத்தரவு காரணமாக ‘பிராமண’ மாணவர்கள் இன்ஜினியரிங் கல்லூரியில் சேர முடியவில்லை” என்று புகார் செய்தனர். காந்தி திருப்பி கேட்டார், “பிராமணர்கள் என்று வந்து விட்டால் அவர்கள் கடமை வேதத்தை ஓதுவதும், வேதத்தை பயிற்றுவிப்பதுதானே ? இன்ஜினியரிங் படிப்பு படிப்பது பிராமண தர்மமாகுமா ?” என்று கேட்டார். பார்ப்பனர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.

குற்றாலம் நீர்வீழ்ச்சிக்குப் போன காந்தி, அங்கே தீண்டப்படாத மக்களுக்கு குளிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தவுடன், அருவியில் குளிக்க மறுத்து விட்டார். சிதம்பரம் நகருக்கு காந்தியார் வந்தபோது, தில்லை நடராசன் கோயிலுக்குள் காந்தி, “தீண்டப்படாத மக்களை” அழைத்து வந்து விடுவார் என்று அஞ்சிய தீட்சதர்கள், நடராசன் கோயிலுக்குப் பூட்டு போட்டனர். காந்தி சிதம்பரம் நகரை விட்டுச் சென்ற பிறகுதான் கோயில் பூட்டு திறக்கப்பட்டது.

காந்தியார், கோட்சே பார்ப்பனரால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி வந்தவுடன் காங்கிரஸ் காரர்களே, பார்ப்பனர்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தொடங்கியதற்கான வரலாற்றுச் சான்றுகள் ஏராளம் உண்டு. குறிப்பாக மகாராஷ்டிரா மாநிலத்தில் என்ன நடந்தது என்பதை அப்போது மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்துறை அமைச்சராக இருந்த துவரகா பிரசாத் மிஸ்ரா, “ஒரு சகாப்த வாழ்க்கை” (Living an era) என்ற தனது சுயசரிதையில் பதிவு செய்திருக்கிறார்.

காந்தி கொலை நடந்தபோது, ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கர் சென்னையில் இருந்தார். சேதி அறிந்து நாக்பூர் விரைந்து, ஆர்.எஸ்.எஸ். தலைமை அலுவலகத்தில் ஆர்.எஸ்.எஸ்.காரர்களை அழைத்து ஆலோசனை நடத்தினார். ஆர்.எஸ்.எஸ். காரர்கள் ஒன்று திரண்டிருக்கும் சேதி அறிந்த பார்ப்பனரல்லாத மக்களும் காங்கிரசாரும் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்துக்கு திரண்டு போய் தீ வைக்க முயன்றனர். பாதுகாப்புக் கேட்டு, தன்னிடம் ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் பேசியபோது, அவர்களுக்கு பாதுகாப்பான இடம் சிறைதான் என்று கைது செய்ய உத்தரவிட்டதாக மிஸ்ரா எழுதியிருக்கிறார். பார்ப்பனர் குடியிருப்புகள், அவர்கள் நடத்திய கல்வி நிறுவனங்கள் தாக்கப்பட்டதை யெல்லாம் அவர் விவரிக்கிறார். பார்ப்பனரல் லாதார் இயக்கம் தீவிரம் பெற்றிருந்த தமிழ்நாட்டு சூழலில், அப்போது பெரியாரோ அவரது திராவிடர் இயக்கத்தினரோ பார்ப்பனருக்கு எதிராக கலவரத்தைத் தூண்டி விட்டிருந்தால் எத்தகைய இழப்புகளை அவர்கள் சந்தித்திருக்கக் கூடும் என்பதை கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. ஆனால், அந்த சூழலிலும் பார்ப்பனர்களுக்கு எதிரான வன்முறைகள் மகாராஷ்டிராவைப் போல் இங்கே வந்து விடக் கூடாது என்றுதான் பெரியார் மனிதநேயத்தோடு கருதினார். அதுவரை பெரியாரை “உள்ளே அழைக்க மறுத்த” வானொலி, அப்போது மட்டும் பெரியாரை பேச அழைத்தது. பெரியாரும் தயங்காது போனார். ‘கலவரங்களில் எவரும் ஈடுபட வேண்டாம் அமைதி காக்க வேண்டும்’ என்று வேண்டுகோள் விடுத்தார். தனது ‘குடிஅரசு’ பத்திரிகையில் “மக்கள் தங்களது அரசியல் மத வேறுபாடுகளை மறந்து சகோதர பாவத்துடன் நடந்து கொள்வதே நாம் காந்தியாருக்கும் செய்யும் மரியாதை” என்று எழுதினார்.

கோவையிலே இந்து முன்னணி நிர்வாகி ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்பதை ஒரு சாக்காக வைத்து கோவையில் இஸ்லாமியர் நிறுவனங்களை குடியிருப்புப் பகுதிகளை இந்துத்துவ சக்திகள் சூறையாடியதை இந்த நிகழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அண்ணா, ‘திராவிட நாடு’ இதழில் காந்தியார் மறைவு குறித்து பல கட்டுரைகளை தீட்டினார். அதில் ஒரு பகுதியை சுட்டிக் காட்டலாம்.

> “இந்து மதத்தில் ஏறிப்போய், ஊறிப்போய் இருந்த கேடுகளை எல்லாம், தமது பரிசுத்த வாழ்க்கையாலும், தூய்மையான உபதேசத்தாலும், புதிய தத்துவார்த்தத்தாலும், நீக்கும் காரியத்தில் உத்தமர் காந்தியார் ஈடுபட்டிருந்தார். இந்த அரும்பணியால், அன்பு மார்க்கம் தழைக்கும். அனைவரும் ஆண்டவனின் குமாரர்களே என்ற உண்மை துலங்கும் என்று மனமார நம்பினார். அந்தோ! இந்த அகத் தூய்மையோ, புறத் தூய்மையோ நெடுங்காலமாகக் குவிந்து வளர்ந்து போயுள்ள மதவெறியர்களைத் திருத்தாதே என்று கூறி வந்தோம் - அவர் யாரிடமிருந்து அன்பு மார்க்கத்தை எதிர்பார்த்தாரோ, அங்கிருந்தே அவர் உயிரைக் குடிக்கும் ஒரு வெறி பிடித்த இந்து கிளம்பினான். இவன் இந்து மார்க்கத்தையும், இந்து அரசையும் நிலைநாட்டும் நோக்கம் கொண்டவன் என்று கூறப்படுகிறது. ஹைதராபாத் சமஸ்தான சத்தியாக்கிரஹத்திலும் கலந்து கொண்டானாம். பெயர் நாதுராம் விநாயக் கோட்சே. உலகை நோக்கி நமது உள்ளத்தை நோக்கி, “உத்தமரை வீழ்த்தி விட்டான் ஓர் உலுத்தன். அவருடைய உடலை நாங்கள் இழந்து விட்டோம் - அவருடைய உத்தமக் கொள்கைகளின் மூலம், அவர் இனி என்றென்றும் வாழ்வார்”

என்று எழுதினார் அண்ணா.

காந்தியின் கொள்கைகளை கடுமையாக எதிர்த்து வந்த திராவிட இயக்கம், ‘இந்துத்துவா’வின் குண்டுகள் அவர் உயிரை ‘காவு’ வாங்கியபோது, சரியான கொள்கை நிலைப்பாட்டை மேற்கொண்டதை இந்த நிகழ்வுகள் படம் பிடிக்கின்றன.

மக்கள் ஒற்றுமைக்கு முதன்மையான எதிரிகள், இந்த பார்ப்பனிய பாசிஸ்டுகள்தான் என்ற ஆழமான புரிதல் திராவிடர் இயக்கத் துக்கு எப்போதும் உண்டு. தமிழ் நாட்டின் உளவியல் இந்த பாசிசத்தை ஒருபோதும் அனுமதித்துவிடாது. இதை காந்தியாரே அவரது காலத்தில் உணர்ந்திருந்ததைத்தான் தமிழகத்தில் அவர் பிரதிபலித்த கருத்துகளும் உணர்த்துகின்றன.

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

- கடந்த 1989 முதல் தமிழ் மக்கள் தங்களுக்கு உயிர் துறந்த மாவீரர்களை நினைவு கூரும் வண்ணம் நவம்பர் 27-ஆம் தேதியை மாவீரர் நாளாக அனுட்டித்து வருகின்றனர். அந்நாளை தமிழ் மக்கள் அதீத புனித நாளாகவே கருதுகின்றனர். அன்று மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதை வழக்கமாக கொண்டுள்ளனர். ஆனால் 2009-க்குப் பிறகு, மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்ட நிலையிலும், இராணுவத்தின் அதீத இருப்பின் காரணமாகவும் ஒரு சில ஆண்டுகள் மக்கள் தங்கள் இல்லங்களிலேயே மாவீரர்களை நினைவு கூர்ந்தனர். ஒரு சில பொது நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. ஆனால் அரசு அக்காலக்கட்டத்தில் கூடுதல் படையினரை அனுப்பி மக்களை அச்சுறுத்த முயன்றது. கடந்த ஆண்டு (2016), தமிழ்த் தலைவர்கள் மாவீரர் நாளை பொது வெளியில் கடைபிடிக்க அனுமதிக்க வேண்டும் என அரசிடம் கோரிக்கை விடுத்தனர். ஆனால் இலங்கை பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜயவர்தனா, கடந்த நவம்பர் 22, 2016 அன்று மாவீரர் நாளை பொதுவில் நடத்த அனுமதிக்க முடியாது எனவும், அவ்வாறு கடைபிடிப்பவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

இவற்றின் மூலம், தற்போதைய சிறிசேனா அரசு தனது முந்தைய அரசுகளிடமிருந்து எவ்வகையிலும் மாறுபடவில்லை என்பது தெளிவாகிறது. உண்மையான நல்லிணக்கத்தின் பால் இந்த அரசு அக்கறை காட்டவில்லை என்பதும் வெட்ட வெளிச்சமாகிறது. தனது முந்தைய அரசுகளைப் போலவே இந்த அரசும் நடந்து விட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்களை மூடி மறைப்பதிலேயே கவனம் செலுத்துகிறது. எனவே கால நீட்டிப்புத் தருவது என்பது நல்லிணக்க நடவடிக்கைகளை மேலும் சிதிலப் படுத்தவே செய்யும். அதன் மூலம் தமிழர் நிலையை மேலும் மோசமாக்கும்.

இலங்கை அரசு தொடர்ந்து தனது வாக்குறுதிகளை காக்க தவறிய போதும், அந்த வரலாற்றினை நன்கு அறிந்திருந்த போதும், அய். நா. மற்றும் அதன் மனித உரிமைக் குழு உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகம் இலங்கை அரசு மீது முழு நம்பிக்கை வைத்துள்ளது. எனவே இலங்கை அரசுக்கு கூடுதல் நேரம் வழங்குவதைக் காட்டிலும் இலங்கை அரசின் மோசமான செயல்பாடுகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டிய கடப்பாடு பன்னாட்டுச் சமூகத்திற்கு உள்ளது. இலங்கையில் நாளுக்கு நாள் மோசமாகி வரும் மனித உரிமைச் சூழல், தமிழ் மக்களின் நிலை ஆகியவை குறித்தும் பன்னாட்டுச் சமூகம் அக்கறையும் புரிதலும் கொள்ள வேண்டும்.

அய். நா. மனித உரிமைக் குழு, அய்.நா.வின் பாதுகாப்பு அவையை உள்ளடக்கிய ஒரு பன்னாட்டு விசாரணை நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். இலங்கையின் இனச் சிக்கலுக்கு அரசியல் தீர்வு காணக் கூடிய சரியான பன்னாட்டு செயல் முறைகளை வகுப்பதே இன்றைய கட்டாயத் தேவையாக உள்ளது.

இந்தப் பின்னணியில் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதே இலங்கையில் நிலவும் இனச் சிக்கலுக்கான ஒரே தீர்வு என நாங்கள் சமர்ப்பிக்கிறோம்.

**– தமிழின உணர்வாளர்கள்**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 27th January 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN